**முதலாது கூடுதல் மாவட்ட நீதிமன்றம். திண்டிவனம்**

O.S.No.220/2024 நாள்: 05.03.2026.

**பி.சா.3 அருள்** த/பெ.கிருஷ்ணன் என்பவர் ஆஜர். சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார் .

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. என் நிறுபன பிரமாண வாக்குமூலம் படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் தரப்பினார் இல்லை. தாவா சொத்து யார் பேரில் பூர்வீகமாக இருந்தது என்றால் என் அப்பா கிருஷ்ணன் பெயரில் இருந்தது. மொத்த இடமும் அவர் பெயரில் இருந்ததா என்றால் ஆமாம். அதற்கு பட்டா எண் தெரியுமா என்றால் தெரியும் 247. என் அப்பாவின் வாரிசுகள் இருசன், மூர்த்தி, சேகர், அருள், ராமசாமி. என் அப்பாவின் இறப்புச் சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. என் அப்பா பெயரில் உள்ள சொத்து இருக்கு அவர் இறந்த பின் எங்கள் பேரில் பட்டா வர வேண்டும் என்றால் அது எப்படி மாற்றிப் போட்டார்கள் என்று தெரியாது. எப்போது மாற்றி போட்டார்கள் என்றால் வருடம் தெரியாது. ஏன் இந்த மூன்று பேர் மீது வழக்கு போடவில்லை என்றால் பட்டா அவர்கள் பேரில் இருந்து தான் அவர்கள் சொத்து என்று இருந்து விட்டோம் அதன் பிறகு தான் என் அப்பா பெயரில் இருந்தது தெரிய வந்தது.
2. என் நிறுபன வாக்குமூலத்தின் 3 வது பத்தியில் கிருஷ்ணன் இறந்த பிறகு அவரது வாரிசுகளான கிருஷ்ணன் மகன் இருசன், ஆறுமுகம் மகன் மணி, சின்னராசு மகன் முத்தன், ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டு அனுபவித்து வந்த சொத்தாகும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினர்கள் என்றால் பங்காளிகள். பட்டா மாறியதை தெரிந்து நான் தான் சார் ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். பட்டா மாறியது எப்படி தெரிய வந்தது என்றால் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று பார்த்த போது எங்கள் மூன்று பேர் எடுத்துவிட்டு பவுனம்மாள் பேரில் இருந்தது தெரியவந்தது. 2015 ஆம் ஆண்டு தலையாளி, மரக்காணம் வட்டாட்சியர், கந்தாடு கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் ஆய்வுக்கு வந்தார்களா என்றால் தெரியாது.
3. நான் தாவா சொத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் வசிக்கிறேன். அங்கே போய் சுமார் 8 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதால் ஏன் எங்களுக்கு சமரசம் பேசிய தீர்க்கவில்லை என்றால் எங்களை கூப்பிடவில்லை. பவுனம்மாள் பெயரில் பட்டா வந்தபின் அவருடைய மகன்

ஒருவருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. தான செட்டில்மெண்ட் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு சேரவேண்டியது மொத்தம் 24 சென்ட். தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் எங்களிடம் தான் உள்ளது. கூட்டு பட்டா இருசன் பேரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தவறாக கொடுத்துள்ளார்கள். இருசன் வாரிசுகள் யார் என்றால் மதன், பாலச்சந்தர், இளையராஜா. அவர்கள் சேர்ந்து மனு கொடுத்தார்களா என்றால் இல்லை. என் அண்ணன் சொத்துக்கு நான் மட்டும் மனு கொடுத்தேனா என்றால் எங்கள் பொது சொத்து. எல்லோரும் தாவா சொத்தில் வசிக்கிறோமா என்றால் இல்லை வேறு இடத்தில் வசிக்கிறோம்.

4. சார் ஆட்சியர் விசாரணையில் நான் கலந்து கொண்டேன். நான் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்தேனா என்றால் இல்லை பிரதிவாதிகள் தான் போட்டார்கள். வாதிகளின் தாயார் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்த விசாரணையில் நான் கலந்து கொண்டேன். நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் அது முடிந்த பிறகு பேசிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பவுனமாளுக்கு தனிப்பட்ட கொடுக்கும் போது பிரதிவாதிகளுக்கும் தனிப்பட்ட கொடுத்தார்கள் என்றால் அவருக்கு வேறு இடத்தில் பட்டா கொடுத்து இருக்கலாம். அந்த இடத்திற்கும் பவுனம்மாளுக்கும் சம்பந்தமில்லை. தாவா சொத்தில் எப்படி அனுபவம் செய்கிறோம் என்றால் போய் வருவோம் ஆடு, மாடு கட்டுவோம். வாதிகள் வசிக்கிறார்களா என்றால் அவர்கள் பாகத்தில் வசிக்கிறார்கள்.

5. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரி இல்லை.

**மறுவிசாரணை இல்லை**

Taken down by me / before me in open court, interpreted/read over to the witness and admitted by deponent to be correct.

**(S.d/-T.H.Mohammed Farooq)**
I Additional District Judge,
Tindivanam.